முதன்மை தொழிலாளர் நீதிமன்றம் வேலூர், வேலூர் மாவட்டம்

ஐ.டி.எண். 61 /2025

2026ம் ஆண்டு ஜீலை மாதம் 21–ஆம் தேதியில் திரு.செந்தில் குமார் என்பவரது வாக்குமூலம் (1908–ஆம் ஆண்டின் சட்டம் 10–வது கட்டளை மற்றும் தொழில் தகராறு சட்டம் 1947 ஏற்பாட்டின் படி) திருமதி. A.K. நாசினி, Deputy Nazir என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்யப்படுகிறது.

Solemnly affirmed in accordance with the provisions of Act 1873 on the day of 21.07.2026.

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | திரு.செந்தில் குமார் |
| 2. | தந்தை பெயர் | : | திரு,வாசுதேவன் |
| 3. | தொழில் | : | கண்காணிப்பாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் விழுப்புரம் |
| 4. | வயது | : | 51 |
| 5. | முகவரி | : | கண்காணிப்பாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் விழுப்புரம் |

**முதல் விசாரணை :**

நிர்வாக தரப்பு சாட்சி 1 என்னுடைய வழக்கிற்கு ஆதரவாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் காணப்படும் கையொப்பம் என்னுடையது தான். இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு பொது மேலாளாலரால் கொடுக்கப்பட்ட 14.07.2026 ல் கொடுக்கப்பட்ட அதிகார கடிதம் நி.த.சா.ஆ.1 ஆகும். கிளை மேலாளார் கள்ளகுறிச்சி அவர்கள் எதிர் மனுதாரரின் நிர்வாகத்தின் பொது மேலாளருக்கு அனுப்பியிருந்த 04.11.2015 ம் தேதியிட்ட ஆய்வறிக்கை நகல் நி.த.சா.ஆ.2 ஆகும். 28.09.2018 தேதியிட்ட பணியாளரை எதிர் மனுதாரர் நிர்வாகம் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தரவின் நகல் நி.த.சா.ஆ.3ஆகும். பணியாளருக்கு தற்காலிக வேலை நீக்கத்தி்லிருந்து விடுவித்து மீண்டும் பணியில் சேர உத்தரவு மற்றும் பயிற்சிக்கு அனுப்பிய 17.11.2015 நாளிட்ட உத்தரவின் நகல் நி.த.சா.ஆ.4 ஆகும். 10.12.2015 தேதியிட்ட குற்றச்சாட்டின் குறிப்பாணை நகல்

நி.த.சா.ஆ.5ஆகும். பணியாளர் பயிற்சை முடித்துக் கொண்டு மீண்டும் பணி வழங்க கோரி அளித்துள்ள 04.02.2016 நாளியிட்ட கடித நகல் நி.த.சா.ஆ.6 ஆகும். பணியாளருக்கு உள் விசாரணையில் ஆஜராக கோரி அனுப்பியிருந்த 27.04.2016 நாளிட்ட உள் விசாரணை நேட்டீஸ் நகல் நி.த.சா.ஆ.7 ஆகும். உள் விசாரணை நோட்டீஸை பணியாளர் பெற்றுக்கொண்டதிற்கான ஏற்பளிப்பு நகல் நி.த.சா.ஆ.8 ஆகும். உள் விசாரணை 09.05.2016 ல் அன்று நடைபெற்றதிற்கான குறிப்புகள் நகல் நி.த.சா.ஆ.9 ஆகும். 18.05.2016 தேதியிட்ட உள் விசாரணை முடிவு நகல் நி.த.சா.ஆ.10 ஆகும்.பணியாளருக்கு அனுப்பப்பட்ட 03.06.2016 நாளியிட்ட காரணம் கேட்கும் குறிப்பு ஆணை மற்றும் பணியாளர் பெற்றுக்கொண்டதிற்கான ஏற்பளிப்பு நகல் நி.த.சா.ஆ.11 ஆகும். பணியாளருக்கு வழங்கப்பட்ட 22.12.2016 நாளியிட்ட இறுதி ஆணை உத்தரவு நகல் நி.த.சா.ஆ.12 ஆகும். 01.09.1992 அன்று நடைபெற்ற 12(3) ஊதிய ஒப்பந்த சரத்துகள் நகல் நி.த.சா.ஆ.13 ஆகும்.

குறுக்குக்காக விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down before/by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him/her to be correct.

PACKIAJOTHI

Digitally signed by PACKIAJOTHI
Date: 2026.07.21 16:53:31 +0530

Presiding Officer